REGD. No. M. 6311

PHONE No.: 65630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 233

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: மாசி 30உ சனி (13—3—54) ★ ★ ★ வெளியூர்: பங்குனி 1உ ஞாயிறு (14—3—54)

யூனியன் போக்கு: ஆந்திரர் அதிருப்தி

வைகை, அமராவதி திட்டத்திற்கு யூனியன் சர்க்கார் கடன் உதவி

—:o:—

கடிதப் போக்குவரத்து நடக்கிறதாம்

சென்னை, மார்ச் 12—

இந்திய சர்க்கார் கடன் உதவி அளிக்கும் திட்டங்கள் அமராவதி, வைகை, மேட்டூர் கால்வாய் திட்டங்களுக்காக மட்டுமே தான் என்று சட்டசபையில் நிதி மந்திரி குறிப்பிட்டார். அவர் மேலும் அதுபற்றி விளக்குகையில் கூறியதாவது:—

"இந்த ஆண்டு இவற்றிற்காக இம்மாநிலத்திற்குத் தரவேண்டிய கடன் அளவு பற்றி இந்திய சர்க்காருடன் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது; திட்டம் அமுலாகும் மாவட்டங்களுக்கு இந்தக் கடன் தொகை செலவிடப்படும்," என்றார்.

"நிரந்தரமாக பஞ்சப் பகுதியாக உள்ள இடங்களை அபிவிருத்தி செய்ய இந்திய சர்க்கார் இதுவரை நிதி உதவி ஒன்றையும் அனுமதிக்கவில்லை யென்றும், ஆனால் சில திட்டங்களைக் கையாண்டு நிரந்தர அபிவிருத்தி அடையச் செய்ய அத்திட்டங்களுக்குக் கடன் அளிக்க அரசாங்கம் முன்வந்திருக்கிறது" என்றும் அவர் கூறினார்.

தீர்ப்பாசனத் திட்ட வேலைகள்

கைதிகள் ஈடுபடுத்தப்படுவர்!

துங்கபத்திரா திட்ட வேலையில் கைதிகளை ஈடுபடுத்தி வெற்றி பெற்றதுபோல், சில மாதங்களில் ஆரம்பமாக இருக்கும் அமராவதி, வைகை நீர்ப்பாசனத் திட்ட வேலைகளுக்கும் கைதிகளை ஈடுபடுத்த சென்னை சர்க்கார் உத்தேசித்துள்ளனர்.

கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புடைய புகையிலை வெறும் குப்பையாகிவிடுமே என்று குமுறல்!

'கொள்முதல் விஷயத்தில் வெள்ளை வியாபாரிகள் எதேச்சாதிகாரம் தலைவிரித்தாடுகிறது'

இந்திய சர்க்கார் அலட்சியத்திற்கு ஆந்திர சர்க்கார் வருத்தம்!

"மத்திய சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்காமல் தாமதிக்கும் ஒவ்வொரு நாளும், ஆந்திர புகையிலை உற்பத்தியாளர்களுக்கு லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டத்தைக் கொடுக்கும்."

"உற்பத்தியாளர்களுக்குச் சொந்தமான, போதிய வசதியற்ற இடங்களில் தேங்கிக் கிடக்கும் புகையிலையை, அங்கிருந்து அகற்றுவதற்கான ஏற்பாட்டை உடனடியாக எடுத்துக்கொள்ளத் தவறினால், கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புடைய புகையிலை மீண்டும் கழனியில் கொட்ட வேண்டிய வெறும் உரமாக மாறிவிடும்."

"சில ரகம் புகையிலைகள் மீது போடப்பட்டுள்ள கலால் வரியை ரத்துசெய்ய ஏற்கனவே கோரியுள்ளதையும், கைவசம் தேங்கிக் கிடக்கிற மிகுதியான புகையிலையை ஏற்றுமதி செய்வதற்கான மார்க்கெட்டுகளைக் காண வேண்டுமெனவும் முன்னரே வலியுறுத்தியுள்ளதையும் யூனியன் சர்க்காருக்கு மறுபடியும் நினைவுறுத்தி உடனடியாக ஆவன செய்யுமாறு வற்புறுத்துகிறோம்."

"இப் புகையிலை விவகாரத்தில் முடிவு காண விரைவு காட்டாமல் இந்திய சர்க்கார் தாமதம் செய்வதைக் கண்டு ஆந்திர சர்க்கார் வருந்துகிறது."

மேற்கூறியவாறு, தமது சர்க்கார் கருத்தறிவித்து, ஆந்திர மாநில விவசாய அமைச்சராக உள்ள பி. திம்மா ரெட்டி அவர்கள், யூனியன் சர்க்கார் விவசாய மந்திரி பஞ்சாபராவ் தேஷ்முக்கிற்குக் கடிதம் எழுதியுள்ளார்.

"ஆந்திர மாநிலத்தில் தேங்கிக் கிடக்கும் மொத்தப் புகையிலையில் 25 சத விகிதத்தைச் சேர்ந்தும் பாராட்டும் வெளிநாட்டு வியாபாரக் கம்பெனிகள், புகையிலை உற்பத்தியாளர்களுக்கும் மாநில சர்க்காருக்கும் புகையிலைக் கொள் முதல் விவகாரத்தில் தம்மிச்சைப்படி சர்வாதிகாரம் செய்கின்றன."—என்று கவலை கொண்டு குறிப்பிட்டுள்ளார்.

★★★★★★ ★★★★★★★★★★★

"ஹோம்லண்ட்"

தி. மு. க. ஆங்கில வார இதழ்

★

சென்னை, மார்ச் 12—

"ஹோம் லண்ட்" என்னும் ஆங்கில வார இதழின் ஆசிரியராக தோழர் சி. என். அண்ணாதுரையும், பிரசுரகர்த்தராக தோழர் எஸ்.எஸ்.பி.லிங்கமும், அச்சிடுவோராக தோழர் இரா. நெடுஞ்செழியனும் இன்று பிரதம மாகாண மாஜிஸ்டிரேட் முன்பு பதிவு செய்துகொண்டனர்.

★★★★★★★★★ ★★★★★★★★

பதவி பெற அனைவருக்கும் உரிமை உண்டென்கிறது அரசியல் சட்டம்!

நாமம்—நீறு போட்டவர்களுக்குத்தான் பதவி என்கிறார் நிதி அமைச்சர்!

இந்திய அரசியல் சட்ட விதிகளை வேண்டுமென்றே அலட்சியப்படுத்தும் அரசியல் மத வெறி!

சென்னை, மார்ச் 13—

"பிஞ்சு மனதை சரியான முறையில் பக்குவப் படுத்துவதற்குப் பயிற்சி அளிப்பதைக் காட்டிலும் சிறந்த பணி வேறெதுவும் இருக்க முடியாது. அதனால்தான் சர்க்கார் கல்வி நிலையங்களில் தலைமை ஆசிரியர்கள், பிரின்சிபால் ஆகிய முக்கிய பதவிகளுக்கு மிகவும் முதல்தரமான நபர்களையே பொறுக்கி எடுக்கக் கவனம் செலுத்தி வருகிறேன்,"

—இவ்வாறு நேற்று மாலை திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளி ஆண்டு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் நிதி மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்தார். தொடர்ந்து அவர் குறிப்பிட்டதாவது:—

"பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், கல்லூரி பிரின்சிபால்கள் ஆகியவற்றின் பதவிகளுக்கு அறிவாளிகளாக மட்டுமின்றி, தெய்வ பக்தியும், குழந்தைகளிடம் அன்பும், கடமை உணர்ச்சியும் கொண்ட நன்னடத்தைக்கும், ஒழுக்கத்திற்கும் குணசீலர்களாக விளங்குபவர்களையே நியமிப்பதற்கு திட்டம் ஒன்றை நான் யோசித்து வருகிறேன்," என்றார்.

★

இந்திய அரசியல் சட்ட விதிகளில் காணப்படுவன:—

16 (1) ராஜ்யத்திலுள்ள அலுவலகங்களில் வேலைக்கமர்த்தப்படுவதில் எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் தரப்பட வேண்டும்.

(2) எந்த ஒரு குடிமகனும், மதம், இனம், ஜாதி, பால் பிறந்த இடம், வசிக்கும் இடம் இவைகளில் ஏதாவதொரு காரணத்துக்காக ராஜ்யத்தின் அலுவலகங்களில் எந்த வேலை பெறவும் மறுக்கணிக்கப்படுவதோ வேற்றுமை பாராட்டப்படுவதோ கூடாது.

28 (1) முழுவதும் ராஜ்ய அரசாங்க நிதியிலிருந்தே நிர்வகிக்கப்படுகிற எந்த கல்வி நிலையத்திலும், மத சம்பந்தமான போதனை தரப்படக் கூடாது.

(3) ராஜ்ய அரசாங்கத்தின் அனுமதி பெற்ற, அல்லது பண உதவி பெறுகிற எந்த ஒரு கல்வி நிலையத்திலும் கல்வி பெறும் யாரும், அவர்கள், பெற்றோரின் கண்காணிப்பிலிருக்கும் மைனர்களாயிருந்து, பெற்றோர் சம்மதித்தாலன்றி, அக்கல்வி நிலையங்களிலோ, அதை ஒட்டிய ஸ்தாபனங்களிலோ நடைபெறும் மத ஆராதனைகளில் பங்கு பெறுமாறோ, மத போதனை பெறுமாறோ வேண்டப்பட மாட்டார்கள்.

29 (2) ராஜ்ய அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படுவதோ, அல்லது அரசாங்கத்தின் உதவி பெறுவதோ ஆன எந்த ஒரு கல்வி நிலையத்திலும், மதம், இனம், ஜாதி, மொழி ஆகிய ஏதாவது காரணங்களுக்காக, யாரும் அக்கல்வி நிலையங்களில் கல்வி பெறுவதினின்றும் தடுக்கப்படக் கூடாது.

புயல் உருவாகிறது!

சென்னை, மார்ச் 13—

வங்காள குடாக் கடலில் தென் மேற்கில் ஒரு புயல் உருவாகியுள்ளதாகவும், அதன் மையம் நாகப்பட்டினத்திற்கு 100 மைல் தெற்கில் இருந்ததென்றும், அது, மேற்கு—வடமேற்கு திசையில் நகர்ந்து நாகைக்கும்—பாம்பனுக்கும் மத்தியில் உள் நாட்டில் வீசலாம் என்றும், இதனால் தென் தமிழ் நாடு, திருவாங்கூர்-கொச்சி மாநிலத்தில் பரவலான மழை பெய்யும் என்றும் வடக்குத் தமிழ் நாடு, மலையாளம், தென் கன்னடம் ஆகிய இடங்களில் தூறல் இருக்கலாமென்றும் தெரிகிறது.

நிலங்களை தேசிய உடைமையாக்கும் மசோதா

பர்மாவில் நிறைவேறியது

ரங்கூன், மார்ச். 12—

பர்மாவில் நிலங்களை தேசிய உடைமையாக்கும் மசோதா பர்மா பார்லிமெண்டின் மேல் சபையில் எதிர்ப்பின்றி நிறைவேறியது.

கராச்சி, மார்ச். 12—

ஈராக் மன்னர் பைஸல் விமானம் மூலம் கராச்சி வந்து சேர்ந்தார். அவருக்கு அரசாங்க வரவேற்பு அளிக்கப்பட்டது.

பாக். சர்க்காரை கவிழ்க்க சதி?

முன்னாள் இராணுவ அதிகாரிகள் கைது?

கராச்சி, மார்ச். 12—

சர்க்காரைக் கவிழ்க்க சதி செய்ததாக இரு முன்னாள் இராணுவ அதிகாரிகளையும், 3 பாகிஸ்தான் சிவிலியன்களையும் கராச்சி போலீசார் கைது செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்களது வீட்டில் சில அப்பாக்கெட்டுகளும், 1,200 ரவைகளும் கைப்பற்றப்பட்டதாம். கைதானவர்களில் ஒருவர் முன்னாள் மேஜர்-ஜெனரல் எனக் கூறப்படுகிறது.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 13—3—54 சனி

அநீதிக்கு மேல் அநீதி!

'எழுத்தறிவித்தவன் இறைவனுக்குச் சமம்!' ஆசிரியர் தொழில் சிறப்புக்குரியது. அந்தத் தொழிலுக்கு ஈடும் இல்லை, எடுப்பும் இல்லை.

எதிர்காலக் குடிகளைக் கல்விச் சிறப்புடையவர்களாக ஆக்க வேண்டிய பொறுப்பும்—கடமையும் அவர்களைச் சேர்ந்ததேயாகும். சிறு பிள்ளைகளின் துடுக்கடக்கிப் பள்ளியில் சில மணி நேரம் மடக்கி வைத்து, வெளியில் விரட்டிவிடும் வேலையோடு அவர்கள் பணி முடிந்துவிடுவதில்லை. சிறுவர்களின் அறிவு நிலை தெரிந்து, அவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டிய கட்டாயம், ஆசிரியர்களுக்கு உண்டு.

ஆசிரியர்களின் உள்ளமும், உடலும் சாதாரண மக்களுக்குள்ளதைக் காட்டிலும் கொஞ்சம் செம்மையாக இருந்தாக வேண்டும். கடன் பெற்று வாழவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு இல்லாமல் இருந்தால்தான், பொது மக்கள், அதிலும் கிராம மக்கள், அவர்களிடம்—உள்ளூர இல்லையானாலும் — வெளிப்பகட்டிற்காகவாவது, கொஞ்சம் மரியாதை வைத்து நடப்பார்கள். கலங்கிக் கிடக்கும் கடன்பட்டார் நெஞ்சத்துடன் அனவரதமும் வாழும் ஆசிரியர்களின் முகத்தில் தெம்பிருக்காது—பொலிவு இருக்காது. அத்தகையவர்களின் வாயில் இருந்து எழும் சொற்களில் நயமிருக்காது—நல்ல பண்பிருக்காது. மாணவச் சிறுவர்களிடம் காட்டியாக வேண்டிய கனிவுரை இருக்காது—பரிவுரை இருக்காது. சினக்குறிப்போடு கூடிய கடுகடுத்த முகமும், சிடுசிடுத்த சொற்களும்தான் அவர்களிடம் குடிகொள்ளும்.

ஆடை இல்லாதவன் அரை மனிதன். தூய்மையான நல்லாடை ஒருவரை முழு மனிதராக்குகிறது என்பது வெறும் கற்பனை அல்ல!

கும்பி கூழுக்கு அழுகிறபொழுது கொண்டை தாழம் பூவுக்கு அழாது. 'உண்டி சுருங்குதல் ஆசிரியருக்கு அழகு' என்ற புது மொழிக்கு இலக்காக இன்று ஆசிரியர்கள் உள்ளனர். வயிற்றுச் சோற்றுக்கே வாடிக் கிடக்கும் ஆசிரியர்களை நல்லுடையில் காண்பது என்பது குதிரைக் கொம்பாகும்.

கிழிந்த அங்கியில், என்பு தோல் போர்த்த உருவாகக் கிடக்கும் நமது ஆசிரியர்களை, நாட்டு மக்களும் மதிக்க வேண்டும், மாணவச் சிறுவர்களும் பூஜிக்க வேண்டும் எனக் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அடிக்கடிக்கு ஆசிரியர்களைச் சந்தித்து, அறிவுரை கூறுகிறார்கள் அமைச்சர்கள்! அது ஒன்றுதானே பணச் செலவு இல்லாதது! அமைச்சர்கள் அத்துறையில்தானே பெரும் வள்ளல்கள்!

அவர்கள் தொழிலின் மேன்மையை, அமைச்சர்களுக்கு, அவசியமிருந்தாலும் இல்லாமற்போனாலும், ஆசிரியர்களிடம் அடிக்கடி நினைவுறுத்தி வருகிறார்கள். 'எளிய வாழ்க்கை, உயரிய சிந்தனை' என்ற எத்தர்களின் பித்தலாட்ட உபதேசத்தை வேறு, ஆசிரியர்கள் செவிகளில் உபதேசிக்கின்றனர், 'வறுமையில் செம்மை' என்ற முதுரையை அமைச்சர்கள் கற்றில்லாத காரணத்தால்!

அமைச்சர் வேலையை விட, ஆசிரியர் தொழில் ஆயிரம் மடங்கு உயர்ந்தது என்றுகூட கால தோஷத்தால் அமைச்சர் பதவியில் அழுத்தப்பட்டுள்ள சில அமைச்சர்கள், ஆசிரியர்களுக்கு முன்னால் நின்று துதி படிக்கிறார்கள்! காளிக்கு பலியிட ஆட்டை, பூமாலை போட்டு பலிபீடம் இழுத்துச் செல்லும் பூசாரியைப்போல, ஆசிரியர்களுக்குப் புகழ மாலை சாற்றி, வறுமை பலிபீடத்திற்கு அமைச்சர்கள் இழுத்துச் செல்லுகிறார்கள்!

செவிக்கினிய கீதம், இல்லாமை எனும் செந்தேள் கொட்டுக்கு சிறந்த மாற்றெனக் கருதுகிறார்கள்!

வாய் ஒன்றுதானே, அமைச்சர்களுக்குப் பூட்டுப் போடப்படாத பொருளாக இருக்கிறது? கடிவாளம் போடாத குதிரைகள்தானே இந்த அமைச்சர்கள்? எனவே, அறிவுரை, உபதேசம், விவேக உரை, வேதாந்த விசாரணை என்ற முறையிலேயே ஆசிரியர்களின் இடுக்கண்களைக் களைய, இந்த அமைச்சர் சிகாமணிகள் தங்கள் நச்சு நாவை தாராளமாக உபயோகப்படுத்தி வருகின்றனர்.

அமைச்சர்களின் 'அன்புரை'யிலே உள்ளன்போடு இணைந்த அன்பொளி வீசவில்லை! வெறும் வெளிவேஷம்! வீண் பகட்டு!

'அன்புரை' கூறும் அமைச்சர்களின் அதே வாய், அடுத்த கணமே அச்சுறுத்தவும் தொடங்கி விடுகிறது! ஒரே காலத்தில் இரட்டை நாக்கினராக மாறி விடுகின்றனர் இந்த அமைச்சர்கள்! இருப்பது என்னமோ இரண்டு கண்தான்! அவைகளில் இருந்து கனிவையும் சொரிடலாம்! கனலையும் கொட்டலாம்!

மனிதன் உள்ளத்தில் பழங்காலக் காட்டுமிருகம் மறைந்து கிடக்கிறது. உள்ளத்தில் மறைந்து கிடக்கும் விலங்கு வெளிப்படும் பொழுதுதான், மனித உருவிலே உலவும் மிருகத்தைப் பிறரால் பார்க்க முடிகிறது! காங்கிரஸ் அமைச்சர்கள் விஷயத்தில், அவர்கள் உள்ளங்களில் மறைந்து கிடக்கும் சிறுத்தை, அவர்களிடத்தில் கொஞ்சம் அதிகமாக அடிக்கடி வெளிப்படத் தொடங்கிவிடுகிறது.

சாதாரண மனிதர்களைக் காட்டிலும், அமைச்சர்கள், வெகு விரைவில் அந்த மிருகங்களுக்கு அடிமையாகி வருகிறார்கள். அவர்களிடத்தில் அடங்கிக் கிடக்கிற அதிகாரம்தான், அவர்களை மிருக நிலைக்கு அடிக்கடித் தள்ளி மகிழ்கிறது! நிற்க,

'கொண்டவன் கிண்டல் செய்தால், கண்டவன் காரி உமிழ்வான்' என்பது அனுபவம். ஆளவந்தார்கள் ஆசிரியர்களை அலட்சியமாகவும், அவமதிப்பாகவும் நடத்தினால, ஊர் மக்களும் அந்தப் போக்கை அப்படியே பின்பற்றுவதில் வியப்பொன்றுமில்லை.

அன்பையும், அச்சத்தையும், தாங்களும் காக்கப் படைத்திருக்கிற காரணத்தால், அமைச்சர்கள் ஆசிரியர்களை ஆட்டிப் படைத்துவிட்ட பிறகு, அதிகாரம் தந்த பேனாவைக் கொண்ட அடக்குமுறைகளைக் கட்டளையாக்குகிறார்கள். சென்னை ஆட்சியாளர்களிடமிருந்து, ஆசிரியர்களின் உரிமையைக் குலைக்கும் இரண்டு உத்தரவுகள் பிறந்துள்ளன

ஆசிரியர்கள் கேட்டது அமைச்சர் பதவியல்ல! உயிர் உடலோடு ஒட்டிக் கொண்டிருக்கப் பார்த்துக் கொள்ள கொஞ்சம் ஊதிய உயர்வு! ஆனால், கனம் ஆச்சாரியார் ஆட்சி அருளுவது அடக்குமுறை! இது அநீதிக்கு மேல் அநீதி! அரசியலார் அடக்குமுறை பற்றி நாளை எழுதுவோம்.

பிச்சைக்காரரான ஆசிரியர்!

மீண்டும் ஆசிரியராகவே சேவை செய்வார்?

சென்னை, மார்ச். 12—

சமீபத்தில், சென்னையில், போலீசாரால் வளைத்துப் பிடிக்கப்பட்ட 300 பிச்சைக்காரர்களில் ஒருவர் இடைநிலைப் பள்ளி சர்டிபிகேட் பெற்ற ஆசிரியரும் ஒருவராகும் அவர், மேலப்பாக்கம் பிச்சைக்காரர் காலனியில், அவர்களுக்கென ஆரம்பிக்கப்படும் பள்ளிக்கூட ஆசிரியராக சேவை செய்வார்.

இக்காலனியில் இருந்து வரும் 300 பிச்சைக்காரர்களில், 100-பேர் பெண்கள்; 10 பேர் குழந்தைகள். ஆவடியிலுள்ள பழைய இராணுவ டிப்போ, பிச்சைக்காரர் காலனியாக மாற்றி அமைக்கப்படும்.

அடுத்த ஞாயிறன்று சென்னை முதலமைச்சர் இதை ஆரம்பித்து வைக்கிறார். இக்காலனியில் ஒரு மருத்துவ விடுதியும் ஏற்படுத்தப் படும்.

தென்னிந்தியாவில் தேயிலை உற்பத்தி

சென்னை, மார்ச் 13—

தென்னிந்தியாவில் தேயிலை உற்பத்தி இப்போது மிகவும் அதிகரித்துள்ளது; அஸ்ஸாமிலுள்ளதைப்போல் அவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்யப்படவில்லை என்றாலும், இலங்கை இந்தோனேஷ்யாவிலுள்ளதைவிட அதிக உற்பத்தி செய்யப்படுகிறது.

வட இந்திய தேயிலையைவிட தென்னிந்திய தேயிலை தரத்தில் சிறந்ததாக இருக்கிறது.

1953-ல் தான் தெற்கில் உற்பத்தி அதிகரிக்க ஆரம்பித்தது.

புத்த பிட்சுக்களின் எதிர்ப்பு இயக்கம்

"இலங்கையைக் காட்டிக் கொடுத்துவிட்டார்களாம்!"

கொழும்பு, மார்ச் 13—

இலங்கையில புத்த பிட்சுக்கள் இந்திய - இலங்கை உடன்படிக்கையை எதிர்த்துக் கடுமையான எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பித்திருக்கின்றனர். இலங்கை முழுவதும் கண்டனக் கூட்டங்கள் நடத்த அவர்கள் திட்டம் போட்டுள்ளனர்.

இலங்கைப் பிரதமர் இந்தியாவிடம் இலங்கையைக் காட்டிக் கொடுத்துவிட்டதாகவும், சீக்கிரமே இலங்கை எங்கும் இந்தியர் மயமாகிவிடும் என்றும் இவர்கள் கூறுகிறார்கள்.

ஆராய்வதற்கு ஒரு குழு!

எர்ணாகுளம், மார்ச் 11—

திரு-கொச்சி தேர்தலில் காங்கிரசிற்கு ஏற்பட்ட பாதகமான நிலைமை பற்றி காரணங்களைக் கண்டறிவதற்கு 3 பேர் அடங்கிய குழு ஒன்றை திரு-கொச்சி காங்கிரஸ் குழு நியமித்திருக்கிறது.

சென்னை சர்க்கார் ஊழியர்கள் எண்ணிக்கையும் — சம்பளமும்

—:o:—

நிதி அமைச்சர் தரும் புள்ளி விபரம்

சென்னை, மார்ச் 11—

சென்னை வரவு-செலவுத் திட்டம் பற்றி மேல்சபையில் நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில், நிதி மந்திரி சுப்பிரமணியம்; சர்க்கார் நிர்வாகச் செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று உறுப்பினர்கள் கூறியவற்றைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்லுகையில் கீழ்க்கண்ட புள்ளி விவரத்தைச் சமர்ப்பித்தார்:—

நிர்வாகச் செலவு குறிப்பாக பெரிய அதிகாரிகளுக்குத்தான் அதிகமாக இருக்கிறதென்றும், இதை ஏன் குறைக்கக்கூடாதென்றும் உறுப்பினர்கள் சிலர் குறிப்பிட்டனர். இதை நான் பரிசீலனை செய்து பார்த்தேன்; சம்பள குறைப்பு, ஆட்குறைப்பு மூலம்தான் இதைச் செய்ய சாத்தியமாகும்.

சர்க்காரின் மொத்த சிப்பந்திகள் 1,80,000 பேர்; இதில், ரூ 50-க்குக் குறைவாகச் சம்பளம் வாங்குபவர்கள் 1,30,000 பேர் இவர்களுக்கு ஆகும் செலவு ரூ 6,50,00,000.

ரூ 50-லிருந்து ரூ 150 வரை சம்பளம் வாங்குபவர்கள் 37,000 பேர்; இவர்களுக்கு ஆகும் செலவு ரூ 5,20,00,000.

ரூ 151-லிருந்து ரூ 350 வரை வாங்குவோர் 8,900 பேர்கள்; இவர்களுக்கு ஆகும் செலவு ரூ 2,60,00,000.

ஆக, கெஜட்-பதிவில்லாத சிப்பந்திகளுக்கு ஆகும் மொத்தச் செலவு ரூ: 14,30,00,000 ஆகும்.

ரூ. 501-லிருந்து ரூ. 1,000 வரை வாங்குவோர் 726 பேர்கள்—இவர்களுக்கு ஆகும் செலவு ரூ 65,00,000.

ரூ 1000-க்கு மேல் சம்பாதிப்பவர் 168 பேர்கள்—இவர்களுக்கு ஆகும் செலவு ரூ. 25,00,000 ஆகும்" என்றார்.

கெஜட் பதிவில்லாத சிப்பந்திகள் 175,900 பேர்களுக்கு ஆகும் மொத்தசெலவு ரூ 14,30,00,000.

ரூபாய் 501-க்கு மேல் வாங்கும 894 பேர்களுக்கு ஆகும் செலவு 90 லட்சமாகும் என்பது குறிப்பிடத் தக்கது.

மலேயாவில் உயிரிழந்த இந்தியர்கள்

—:o:—

பிரதமர் நேரு அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 12-

"மலேயாவில் ஏற்பட்ட கலவரங்களினால் உயிரிழந்த 70 இந்தியர்களின் சார்பில், மலேயா சர்க்காரிடம், இந்திய சர்க்கார் நஷ்ட ஈடு ஏதாகிலும் கோரியிருக்கிறார்களா?" என்று, இந்திய மேல்சபையில் கேட்ட கேள்விக்குப் பிரதம மந்திரி "இல்லை" என்று பதிலளித்தார்.

"மலேயாவில் உள்ள இந்தியர்களுக்குப் பாதுகாப்பளிக்க சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள்?" என்று கேட்கப்பட்டதற்கு, பிரதம மந்திரி பின்வருமாறு பதிலளித்தார்.

"மலேயாவில் உள்ள இந்தியர்கள் உட்பட எல்லாக் குடி மக்களுக்கும் பாதுகாப்பளிப்பது, மலேய சர்க்காரின் பொறுப்பாகும்; அங்குத் தங்கியுள்ள இந்தியர்களுக்கு, தம் சக்திக்குட்பட்ட எல்லா உதவிகளையும், இந்திய சர்க்கார் பிரதிநிதி அளித்து வருகிறார்."

உருளைக்கிழங்கிலிருந்து ரப்பர்!

ஸ்டாக்ஹோம், மார்ச் 12—

உருளைக்கிழங்கு, மரக்குழம்பு, மரதூள் இவைகளிலிருந்து ஆல்கஹால் வடிபச் செய்து, அதைக் கொண்டு செயற்கை ரப்பரைத் தயாரிக்கலாம் என்பது இங்கு கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

செய்திச் சுருக்கம்

★

ஜோதிபா, மார்ச். 13—

"கூட்டுறவு இயக்கத்தை பிரபலப்படுத்துவதன் மூலம் சாண்டலை ஒழித்துக் கட்டலாம்," என்று சௌராஷ்டிர உள்நாட்டு மந்திரி கூறுகிறார்.

• • •

ராஜ்கோட்டை, மார்ச். 10—

சௌராஷ்டிராவில் கைத்தறி வாரம் இன்று ஆரம்பமாகிறது. சௌராஷ்டிராவின் கைத்தறித் தொழில் அபிவிருத்திக்கு இந்திய சர்க்கார் ரூ 4,06,000 அனுமதித்துள்ளனர்.

* * *

மோர்வி, மார்ச். 13—

ஜெத்பூர் அருகிலுள்ள கிராமங்களில் இலவச கண் வைத்திய வாரம் கொண்டாடப்பட்டது. ஏராளமான கிராமவாசிகள் இலவசமாக கண் வைத்தியம் பெற்றனர்.

• • •

கொழும்பு, மார்ச். 13—

அரச குடும்பத்தினர் மட்டுமே உபயோகித்து வரும் தங்க மைக்கிராபோன் எலிசபெத் இராணியின் உபயோகத்திற்காக பிரிட்டனிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்படுமாம்!

* * *

லண்டன், மார்ச். 10—

உலகிலேயே கால நிலைமையில் விசித்திர மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன; அதன் காரணமாக உலகில், உணவு உற்பத்தி அதிகரிப்பதற்கான வசதிகள் ஏற்படலாம் என்று கருதப்படுகிறது.

* * *

லண்டன், மார்ச். 12—

இந்தியப் பிரதமர் பண்டித நேரு, மற்றும் இந்திய சர்க்கார் மந்திரிகள் இவர்களின் உபயோகத்திற்காக இந்திய சர்க்கார் இரு 'வைகௌண்ட்' விமானங்களுக்கு ஆர்டர் கொடுத்திருக்கின்றன.

* * *

லண்டன், மார்ச். 13—

எதிரி விமானங்கள் பிரிட்டனை நோக்கி வெகுதூரத்தில் வரும் போது அபாய எச்சரிக்கை தரும் ராடார் சாதனப் பாதுகாப்புகளை அமைக்கும் விஷயமாக பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் மேற்கொண்டு ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர்.

* * *

லட்சுமணபுரி, மார்ச். 13—

"விவசாயிகளுக்கு பயிர்த் தொழிலில் நவீன முறைகள் தெரிந்திருப்பதுடன், பயிர்களைப் பூச்சிகளிடமிருந்து காக்கும் வழிகளும் தெரிந்திருக்க வேண்டும்," என்று இந்திய சர்க்கார் பயிர் பாதுகாப்பு ஆலோசகருக்கு ஐ. நா. நிபுணர், எழுதியிருக்கிறார்.

பத்திரிகாசிரியர்கள் குற்றப் பரம்பரையினரா?

—(:)—

அச்சுத் தடை சட்டம் அரசியல் சட்டத்திற்கு முரணானதே!

—:O:—

'நாகரீக நாட்டில் காணப்பெறாத மானக்கேடான சட்டம்'

டில்லி பாராளுமன்றத்தில் முத்துசாமி வல்லத்தரசு, டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி முழக்கம்

புதுடில்லி, மார்ச் 11—

"கள்ளத்தனமாக இந்த ஏற்பாட்டை சர்க்கார் புகுத்துகிறது. நான் இம்மசோதாவை முழு மூச்சாக எதிர்க்கிறேன்."

"இரண்டு ஆண்டுகளுக்கு முன் இந்த அச்சுச் சட்டத்தின், மூலம், இந்தச் சபையில் புகுத்தப்பட்டபோது, பத்திரிகைகளின் உரிமையைக் காப்பதற்காக, பெருமைக்குரிய நால்வர் சர்க்கார் முயற்சியை மூர்த்தண்யமாக எதிர்த்தார்கள். காலஞ்சென்ற முகர்ஜி, தேசபந்து குப்தா, பண்டிட் லட்சுமிகாந்த மெய்த்ரா முதலியவர்களும் தக்கர்தாஸ் பார்கவா அவர்களுமே அந்த நால்வர் ஆவர்."

"பத்திரிகைகளின் மீது அவசியமற்ற நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக் கொள்ளாது என்பதற்கான பாதுகாப்பு மசோதாவில் சேர்க்கப்படவில்லை. தவறுகிற பத்திரிகைகளின் மீது விதிக்கப்பட இருக்கும் அபராதத்தை அவ்வளவு கூடுதலாக ஆக்கி இருப்பதற்கு எந்தவித நியாயமும் கிடையாது."

"'ஆட்சேபணைக்குரிய விஷயம்' என்பதற்குத் தரப்பட்டுள்ள விளக்கம், நாணயமான பத்திரிகை ஆசிரியர்களைக்கூட, 'தொடர்ந்து அச்சத்தோடு' வாழவேண்டியதாக இருக்கிறதே என்ற நினைப்பைக் கொடுப்பதாக இருக்கிறது."

"இத்தகு சூழ்நிலையில் பொறுப்பான பத்திரிகை வளர்ச்சிக்காகத்தான் இத்தகைய நடவடிக்கை அவசியமாகிறது என சர்க்கார் உள்நாட்டிலாக்கா அமைச்சர் கூறுவது வெறும் கேலிக்கூத்தாகும். பொறுப்புள்ள பத்திரிகைகளை, சர்க்கார் ஆதரவிலோ, தடுப்புக்காவல் சட்டத்தின் நிழலிலோ உருவாக்கிவிட முடியாது. இழிவான எழுத்துக்களைத் தடுப்பதற்கு இப்பொழுதுள்ள பினல் கோட் சட்டத்திலேயே விதிகள் இருப்பதால், மசோதாவைக் கைவிட்டுவிட சர்க்கார் முன்வர வேண்டும்."

—டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி.

★

"ஒரு சுதந்திர நாட்டில் அதிலும், உலகமே புகழ்கிற நிலையில் நமது பத்திரிகைகள் இருக்கும்பொழுது, இத்தகைய சட்டத்தை வைத்திருப்பது, மகா மானக்கேடாகும். பத்திரிகைகளின் உரிமையைக் குறைப்பதற்காக, நாகரிக உலகில் வேறு எங்கும் நடைமுறையில் காணமுடியாத, ஒரு விசித்திரமான முறையை நாம் மேற்கொள்ளுகிறோம், இந்த வெட்கக்கேட்டிலிருந்தும், அபவாதத்திலிருந்தும் நமது பத்திரிகைகளை மீட்க வேண்டும்."

"கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெற்றச் சம்பவங்களை ஆராய்ந்து பார்ப்பதிலோ கூர்ந்து நோக்குவதிலோ, எந்தவித முன்னேற்றத்தையும் பெற முடியாத அளவிற்கு இந்த சர்க்கார் கெடுமதி கொண்டதாக இருக்கிறது."

"இந்திய அரசியல் சட்டம் 19-வது விதி, ஒவ்வொரு குடியின் பேச்சுரிமைக்கும், எழுத்துரிமைக்கும் உரிமை கொடுத்திருக்கிறது. நாம் இச்சட்டத்தை இயற்றுவதின் மூலம், பத்திரிகைகளை இச்சட்ட விதியின் உள்ளடக்கத்தில் இருந்து வேறாகப் பிரித்து, அவைகளை முட்டாள்தனம் என்றாவது அல்லது அயோக்கியத்தனம் என்றாவது கொண்டு, அவைகளைக் கடுமையாக தண்டிக்க முனைவதும், அரசியல் சட்டத்திற்கு உட்பட்டதுதானா என்று கருத வேண்டும்."

—கே. முத்துசாமி, வல்லத்தரசு

★

"ஆட்சேபணை விஷய அச்சுத் தடை சட்டத்தின்கீழ், பத்திரிகைகள்மீது சர்க்காரால் தொடுக்கப்பட்ட வழக்குகளில், எத்தனை வழக்குகளில் வெற்றி கிடைத்திருக்கிறது? எனக்குத் தெரிந்தவரையில், டெல்லி பத்திரிகைகள்மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் தோற்றுப்போய் இருக்கின்றன. இப்படி சர்க்கார் போட்ட வழக்குகள் அனைத்தும், ஒழுக்கத்தைப் பாதுகாக்கவோ, மஞ்சள் பத்திரிகைத் தொழிலைத் தடுக்கவோ, இழிவான எழுத்துக்களை ஒழித்துக்கட்டவோ, போடப்பட்ட வழக்குகள் அல்லவே அல்ல; ஆனால், அவைகள் எல்லாம் அரசியல் காரணங்களுக்காகவோ, அல்லது வேறு உள்ளெண்ணங்களைக் கொண்டோ சர்க்காரால் தொடுக்கப்பட்டவைகளாகும். இதுபோன்ற சட்டங்கள், சர்க்காரின் அந்தரங்க எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கே இயற்றப்படுகின்றன.'

"பத்திரிகை ஆசிரியர்களை, 'குற்றப் பரம்பரையினர்' என்றே இந்த சர்க்கார் கருதிக் கொண்டு செயலாற்றுகிறது"

"பத்திரிகைகளைக் குறித்து விசாரித்து அறிவிக்க சர்க்காரால் நியமிக்கப்பட்ட குழு, தனது அறிக்கையை மே திங்களில் கொடுக்க இருக்கிறது. இத்தகைய அச்சுச் சட்டமில்லாமல் இன்னும் ஒரு ஆறு திங்களுக்கு, இந்த சர்க்காரால் ஆட்சி செய்ய முடியாதா?"

அந்த அச்சுச் சட்டக் குழுவை, இந்தச் சட்டத்தின் காலத்தை மேலும் நீட்டுவது குறித்து, சர்க்கார், கலந்து பேசினதாகத் தெரியவில்லை. சாதாரணமாக ஒரு கேள்வி கூட அக்குழுவைக் கேட்டதாகத் தெரியவில்லை."

—என். சி. சாட்டர்ஜி

சென்னை மாநிலத்தின் கடன் பற்றி நிதி மந்திரி!

புதுடில்லி, மார்ச் 12—

பிரிவினையாகாத சென்னை மாநிலத்திற்கு 1952—53-ம் ஆண்டில் கொடுக்கப்பட்ட கடன்களில் 17 கோடி ரூபாயும், 1953—54ம் ஆண்டில் கொடுக்கப்பட்ட கடன்களில் 11 கோடி ரூபாயும் திருப்பித் தரப்படாமல் பாக்கியாக உள்ளது என்றும், இத்தொகைகளை எந்த வகையில் திருப்பித்தர வேண்டும் என்பது பற்றி இன்னும் தீர்மானமாகவில்லையென்றும் இந்திய மேல் சபையில் நிதிமந்திரி தெரிவித்தார்.

புதுடல்லி, மார்ச் 8—

மலேயாவில் இப்போது சுமார் 6,96,400 இந்தியர்கள் வசித்து வருகின்றனர் என்று உதவி வெளிவிவகார மந்திரி மக்கள் சபையில் தெரிவித்தார்.

கர்ப்பத் தடைக்கு சர்க்கார் உதவி

புதுடில்லி, மார்ச். 12—

குடும்பங்களை அதிகம் பெருகவிடாமல் அளவுடன் கட்டுப்படுத்தும் திட்டம், கர்ப்பத் தடை முறை ஆகியவைகளை பிரபலப்படுத்த மாநில சர்க்கார்கள், மக்கள் நல நிலையங்கள் ஆகியவற்றுக்கு உதவ, இந்திய சர்க்கார் ரூ. 3-கோடி ஒதுக்கியுள்ளனர்.

இந்தத் திட்டத்தை ஆராய்ந்து அமுல் நடத்த சர்க்கார் ஒரு கமிட்டியையும் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

கட்டாக், மார்ச். 10—

ஆந்திர மாநில சர்க்கார் ஏற்பட்டபோது விடுதலை செய்யப்பட்ட ஆந்திரக் கைதிகளில் பலர் ஒரிசாவில் புகுந்து அங்கு தொல்லை கொடுத்துவருவதாகத் தெரிகிறது.

பெண்ணாடம் மாணவர் இலக்கிய மன்றம்

திருவள்ளுவர் திருநாள் கூட்டம்

5—3—54 மாலை 4 மணிக்கு கழக உயர்நிலைப்பள்ளி மாணவர் இலக்கிய மன்றத்தின் சார்பில் திருவள்ளுவர் திருநாள் நடைபெற்றது. திரு. சிவ. பழமலை அவர்கள் தலைமை தாங்கினார். தமிழாசிரியர் முத்தமிழ்ஞானியார் வரவேற்புரையாற்றினார்.

"உலகுக்கென்று ஒரு நூலை அளித்த திருவள்ளுவரைப் பெற்ற பெருமை தமிழுக்குண்டு, தமிழனுக்குண்டு; தமிழ்நாட்டுக்குண்டு; உலகம் போற்றும் ஒருவர் படத்தை நாட்டாண்மைக் கழகப் பள்ளியில் திறக்க மறுக்கப்படுவதைக் கண்டு நான் மிக வருந்துகிறேன்."

பின்னர், தோழர் கா. அப்பாதுரை அவர்கள் இருபதாம் நூற்றாண்டை இரண்டு பாதியாகப் பிரித்து முற்பகுதியில் வாழ்ந்த புலவர்களாகிய மறைமலையடிகள் திரு. வி. க., பண்டிதமணி டி. கே. சி ஆகியோரின் வழி காலத்தை விளக்கியும், பிற்பகுதியில் வள்ளுவர் வழி எவ்வாறு அண்ணாவின் வழியோடு தொடர்புடையது என்பதையும் விளக்கிப் பேசினார்.

இலங்கை சர்க்கார் உத்தரவு—ஒரு விளக்கம்

கொழும்பு, மார்ச் 11-

சமீபத்தில் இலங்கையருக்குத்தான் வேலை கொடுக்க வேண்டுமென்று பிறப்பித்த இலங்கை சர்க்கார் உத்தரவு சர்க்கார் உத்தியோகத்தில் உள்ள நாடற்றவர்களை பாதிக்காதென்று ஒரு சர்க்கார் அதிகாரி கூறினார்.

தோல்விக்குக் காரணம்?

—:O:—

கேப்டவுன், மார்ச், 10—

தென்னாப்பிரிக்காவில் அதிகாரிகளை எதிர்த்து ஆப்பிரிக்கர்கள் இரகசியமாக இயக்கம் நடத்துவதாகவும், நியமிம் திட்டம் அவர்களால் உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஜமால்பூர் தி. மு. கழகம்

அமதாபாத், மார்ச் 12—

7-3-54 மாலை 8-30 மணிக்கு ஈரோடா வட்டக் கிளைக் கழக இல்லத்தில், தோழர் தி. நெடுமாறன் தலைமையில் நகர செயற்குழு உறுப்பினர் கூட்டம் கூடிற்று அதுபோது, உறுப்பினர் கூட்டத்திற்குத் தலைமை தாங்க தி. மு. கழகப் பொதுச்செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்களையும், பொதுக்கூட்டத்திற்குத் தலைமை தாங்க இரா. நெடுஞ்செழியன் அவர்களையும் நியமிக்கப்பட்டது. தோழர் அண்ணாதுரை வருகைக்காக, வரவேற்புக்குழு செயலாளராக தோழர் கா. முனுசாமி தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், அவரை ஊர்வலமாக அழைத்துச் சென்று பொதுக்கூட்டத்தை நடத்துவதென்றும்முடிவுசெய்யப்பட்டது.

கந்தம்பாளையத்தில் தி. மு. கழகம்

22—2—54ல், தோழர் என். பி. செல்லப்பன் தலைமையில் நாமக்கல் வட்டம் கந்தம்பாளையத்தில் புதிய தி. மு. கழகக் கிளை துவக்கப்பட்டது. அதுபோது, செயற் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: கே. என். அப்பாவு; துணைச் செயலாளர்; கே. கே முத்துசாமி; பொருளாளர்: கே. என். பெரியசாமி; மாவட்டப் பிரதிநிதி: கே. ஏ. குப்புசாமி: செயற்குழு உறுப்பினர்கள்: பி. கருப்பையா, என். செங்கோடு, ஏ. பொன்னுசாமி, ஏ பழனிச்சாமி, வி. பெரியசாமி, ஆர் மாரிமுத்து, எஸ். ரத்தினம், எம். காளியப்பன்; என். முருகன், பி. சுப்பன், பி. சுப்ரமணியம்.

பஞ்சநதிக்குளம் தி. மு. கழகம்

2—3—54 இரவு 9 மணிக்கு தி. மு. கழக தேர்தல் கூட்டம் தோழர் த. இராவணன் தலைமையில் நடைபெற்றபோது, செயலாளர்: பொ. மு. பரஞ்சோதி; துணைச்செயலாளர்: பி வடிவேல்; பொருளாளர்: சே. து. சதாசிவம்; மாவட்டப் பிரதிநிதியாக த. இராவணன்: செயற்குழு உறுப்பினர்கள்: சோ பழனிதுரை, ரெ. கண்ணன், சோ. காசிநாதன், வே. தெய்வசிகாமணி, அ. நா. சாமி, ஆ. க. பாலப்பன், தி. கோ. சிதம்பரம், அ. ரெத்தினம், ரெ. ரெத்தினம், கோ. இருளப்பன், க. வீரப்பன், க. சந்திரசேகரன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தோழர் செ. சோமசுந்தரம் கொடி ஏற்றிவைத்தார். பின்னர், இயற்கை எய்திய தோழர்கள்: எம். என். ராய், வி. வி. தனுஷ்கோடி, எம். ஆர். சாமியப்பா ஆகியோருக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது; அத்தக்குடி வழக்கு நிதிக்கு ரூ. 20 அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

புதிய கல்வித் திட்டம்

பஞ்சாயத்து போர்டு கண்டனம்

தென்காசி, மார்ச். 12—

8-3-54ல், நடைபெற்ற பூரானூர் பஞ்சாயத்து போர்டு கூட்டத்தில், புதிய கல்வித் திட்டத்தைக் கண்டித்து உறுப்பினர் தோழர் தெ. பொ. இரத்தினம் அவர்களால் பிரேரேபிக்கப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என தெ. பொ, இரத்தினம் அறிவிக்கிறார்.

வாடிப்பட்டி தி. மு. கழக ஆரம்ப விழா

வாடிப்பட்டி குமரன் திடலில் 7—3—54ல், தி. மு. கழகம் ஆரம்ப விழா நடைபெற்றது. அதுபோது பெரியகுளம் தோழர் பி. பாண்டியன் கழகக் கொடி ஏற்றிவைத்து தி. மு. கழகத்தின் நோக்கமும் கொள்கையும் பற்றி பேசினார். பின்னர், தோழர் ம. குமரதாசன் அவர்கள் மாணவ-மாணவிகளின் படிப்பு நிலையை பாழாக்கி வரும் புதிய ஆரம்பக் கல்வி திட்டத்தை கண்டித்துப் பேசினார். பின்னர் தோழர் பாண்டியன் தலைமையில் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது: செயலாளர்: மு. பொன்ராசு; பொருளாளர்: மு. பரமசிவம்; விளம்பர உறுப்பினர்: மு. ஜெயராம்.

மணி நகர் தி. மு. கழகம்

அமதாபாத், மார்ச் 12—

7—3—54 மாலை 5 மணிக்கு தோழர் மு. கிருட்டினன் தலைமையில், நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், பம்பாய் மாநாட்டிற்கு வரும் தி. மு. கழக பொதுச்செயலாளர் அண்ணாதுரை, மற்ற முன்னணி வீரர்கள் ஆகியோரை அமதாபாத்திற்கு அழைப்பதாகவுள்ள நகரக் குழுவின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், ஆக்க வேலைகள் குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

திருமணங்கள்

7—3—54 காலை 9 மணிக்கு சேலம் அம்மாப்பேட்டை வீரசைவ செனியர் தெரு, தோழர் ஆறுமுகம் அவர்கள் இல்லத்தில் தோழர் எம். ஏ. தேசிஅவர்களுக்கும்—தோழியர் சாவித்திரி அம்மையாருக்கும் தோழர் ஏ. கே. தம்மண்ணன் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது. மணமக்களை வாராட்டி தோழர்கள் கே. பி. நஞ்சப்பன், கே. ஆர். வெங்கடாசலம், என். எம். அர்த்தநாரி, பி. எம். கோபால், வி. வெப்பிரகாசம் ஆகியோர் பேசினர். இத் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு 2 ரூ நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்-நன்றியுடையது-பொறுப்பாளர்.

• • •

8—3—54 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ரொட்டேரியில் மேட்டூர் தோழர் க. மு. சின்னசாமி முன்னிலையில் தோழர் பெரியசாமிக்கும்—தோழியர் மாதம்மாளுக்கும் சீர்திருத்த திருமணம் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி தோழர்கள் பாலு, வெங்கடாசலம், வி. வெப்பிரகாசம் ஆகியோர் பேசினர்—திருமணத்தின் நினைவாக, மணமக்களால் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது-பொறுப்பாளர்.

திருத்தம்

25—2—54 வியாழன் வெளிவந்த 'நம் நாடு' இதழில் அனுதாபம் என்று தலைப்பிட்டு பிரசுரித்திருக்கும் செய்தியில், பிரான்மலை அண்ணாமலை மன்றம் என்பது தவறு; "பிரான்மலை அறிஞர் அண்ணா மன்றம்" என்று திருத்தி வாசித்துக் கொள்ளவும். (ஆ-ர்.)

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

தூத்துக்குடி சதி வழக்கு சம்பந்தமாக திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையம் பொறுப்பேற்றுக் கொள்ளுமுன்பாக தூத்துக்குடித் தோழர்களால் வசூலிக்கப்பட்டு, செலவு செய்யப்பட்டுள்ள வரவு-செலவு கணக்கு விபரங்கள், திருநெல்வேலியில் தங்கி, தூத்துக்குடி சதி வழக்கு நடவடிக்கைகளை மேல் பார்த்துக் கொண்டிருக்கும் தோழர் இரெ. இளம்வழுதி - அட்வகேட் அவர்களிடம் கொடுக்கப்பட்டு, அவரும், வரவு-செலவு கணக்குகளைச் சரி பார்த்து, தி. மு. கழக தலைமை நிலையத்திற்கு அனுப்பியது கிடைக்கப்பெற்றோம்.

தூத்துக்குடித் தோழர்களால் வசூல் செய்தது—ஆக மொத்தம் ரூ. 1,936—15—4. ஆக மொத்தம் செலவு ரூ. 2,067—12—6 என்பதையும் தெரியப்படுத்திக்கொள்கிறோம்.

தூத்துக்குடி தோழர் நீதிமாணிக்கம் அவர்களிடம், தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்களால், தூத்துக்குடி சதி வழக்கு நிதி செலவுக்காகக் கொடுக்கப்பட்டு வந்த தொகைக்கும் 'வரவு-செலவு கணக்கு விபரங்கள் தி. மு. கழக தலைமை நிலையத்திற்கு அனுப்பிவிட்டார்கள்—பெற்றுக்கொண்டோம்.

தலைமைக் கழகத்தின்மூலம் வெளிவரும் தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல் வரவு-செலவு கணக்குகளுடன் மேற்கண்ட வரவு-செலவு கணக்குகளையும் சேர்த்துக்கொள்கின்றோம்.

தி.மு க. தலைமை நிலையம்,
'அறிவகம்'
இராயபுரம், சென்னை-13.

பொறுப்பாளர்,
தூத்துக்குடி வழக்கு நிதி.

திரு—கொச்சியில் ஜனாதிபதி ஆட்சி?

சோஷலிஸ்டுத் தலைவரின் கருத்து

பம்பாய், மார்ச். 12—

திரு—கொச்சி பிரஜா சோஷலிஸ்டுத் தலைவர் பட்டம் தாணு பிள்ளை, "திரு — கொச்சியில் ராஷ்டிரபதியின் ஆட்சியைத் தவிர்க்க முடியுமென்று தனக்குத் தோன்றவில்லை," யென்று இங்கு தெரிவித்தார்.

"ராஷ்டிரபதி ஆட்சியைத் தவிர்ப்பது, தன் கடமை என பி.—சோ. கட்சி கருதவில்லை யென்றும் அவர் குறிப்பிட்டார்.

"பி.—சோ. கட்சி சர்க்கார் அமைக்கத் தயார் என்றும், ஆனால் அது பிற கட்சிகள் மேற்கொள்ளும் கொள்கையைப் பொருத்தே சாத்தியமாகும்," என்றும் அவர் கூறினார்.

* * *

"உடந்தையாக இருக்காதாம்!"

சென்னை, மார்ச் 12—

தோற்கடிக்கப்பட்ட ஒரு சர்க்காரை மீண்டும் பதவிக்குக் கொண்டுவர நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ பிரஜா—சோஷலிஸ்டுகட்சி உடந்தையாக இராது," என்று திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த கூட்டத்தில் டாக்டர் லோகியா தெரிவித்தார்.

• • •

கம்யூனிஸ்டு கட்சி வேண்டுகோள்

திருவனந்தபுரம், மார்ச் 12—

பி—சோ. நிர்வாகக் குழுவின் தீர்மானத்தைப் பொருட்படுத்தாமல் ஒரு கூட்டு சர்க்கார் அமைப்பதில் ஒத்துழைக்குமாறு திரு.-கொச்சி கம்யூனிஸ்டு கட்சி மாநில பி.-சோ. கட்சியை கடைசி நேர முயற்சியாக வேண்டிக்கொண்டுள்ளது.

"திரு.—கொச்சி மக்களின் விருப்பத்தை, பி-சோ தேசிய நிர்வாகக் குழுவின் தீர்மானம் காலின்கீழ் போட்டு மிதித்துவிட்டது," என்று கம்யூனிஸ்டு கட்சி குழு நிறைவேற்றிய தீர்மானம் குறிப்பிடுகிறது.

சீதாராம் நிலைமை கவலைக்கிடம்!

நிடப்ரோலு, மார்ச். 12—

ஆந்திர சர்க்கார் மதுவிலக்கைக் கைவிடக் கூடாதென்பதற்காக சென்ற எட்டு நாட்களாக உண்ணாவிரதம் இருந்துவரும் சாமி சீதாராமின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாயிருக்கிறது அவர் நினைவிழந்துவிட்டார் என்றுத் தெரிகிறது.

தொழிற் சாலையில் தீ விபத்து

ரூ. 50,000 சேதம்

பம்பாய், மார்ச். 12—

இங்கு 'சாந்தா கிரஸ்' விமான நிலையத்திற்குச் சமீபத்தில் கோட்பந்தரில் ஒரு பினாயில் தொழிற்சாலையில் தீப்பற்றிக் கொண்டது. ரூ 50,000 மதிப்புள்ள சொத்துக்கள் அழிந்தன 8 தீயணைக்கும் என்ஜின்கள் 2 மணி நேரம் போராடி தீயை அணைத்தன.

18,000 டன் ஆந்திரா அரிசி வருகிறது!

சென்னை, மார்ச் 13—

ஆந்திர மாநிலத்திலிருந்து இம்மாத முடிவுக்குள் சென்னை மாநிலத்துக்கு 18,000 டன் அரிசியும், திருவாங்கூர்—கொச்சிக்கு 24,000 டன் அரிசியும் வந்து சேரும்.

சர்க்கரை கவுன்சில் நியமனம்

புதுடில்லி, மார்ச் 12—

1951-ம் ஆண்டு தொழில்கள் (அபிவிருத்தி—ஒழுங்கு) சட்டத்தின் கீழ் சர்க்கரைத் தொழிலுக்கான அபிவிருத்திக் கவுன்சில் ஒன்றை இந்திய சர்க்கார் அமைத்திருக்கின்றனர்.

குடி உரிமை மனுக்கள் நிராகரிப்பு

33,000 இந்தியருக்கு கிடைக்கவில்லை

கொழும்பு, மார்ச். 12—

சமீப வாரங்களில் 33,000 மனுக்கள் குடி உரிமைக் கமிஷனரால் நிராகரிக்கப்பட்டிருக்கின்றனவாம். இந்த 33,000 மனுக்களில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் குடி உரிமை கோரியிருந்தனர்.

கள்ள நோட்டு தயாரிப்பு தொழிற்சாலை தீக்கிரை!

ரங்கூன், மார்ச் 12—

ஷான் மாகாணத்தில் பர்மிய விமானப் படை கள்ள பர்மிய நோட்டுகளை உற்பத்திசெய்வதற்காக கோமின்டாங் படைகளினால் உபயோகிக்கப்பட்டு வந்த தொழிற்சாலை யொன்றைத் தாக்கி நாசம் செய்ததாக அறிவிக்கப்படுகிறது.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை

43-வது வட்ட தி.மு.கழக 3-ம் ஆண்டு விழா

14—3—54 மாலை 5½ மணிக்கு

இடம்: மீர்சாகிப்பேட்டை, வெங்கிடாசல முதலி தெரு (பிள்ளையார் கோயில் பின்புறம்)

தலைவர்: டி. ஏ. வெங்கிடாசலம்

பேசுவோர்:
என். வி. நடராசன்
ப. உ. சண்முகம்
வி. எஸ். கோவிந்தராசன்
கோ. இளவரசு

★

பெங்களூர்

14—3—54 மாலை 5½ மணிக்கு

இடம்: சிக்கலால் பாக்கில்

தலைவர்: எம். கிருட்டிணன்

பேசுவோர்:
சி. என். அண்ணாதுரை
மா. மன்னர்

★

மதுரை

சிங்காரவேலர் நினைவுப் படிப்பக ஆண்டு விழா

14—3—54 மாலை 6 மணிக்கு

இடம்: தமுக்கம் திடல்

பேசுவோர்,
எஸ். முத்து
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
என். எஸ். இளங்கோ

★

க. இளமங்கலம்

தி.மு.கழக துவக்க விழா

14—3—54 ஞாயிறு மாலை

தலைவர்: சி. முனுசாமி

பேசுபவர்:
தோழியர் அருண்மொழி

★

திருக்கோட்டியூர்

15—3—54 திங்கள் மாலை

இடம்: மறைந்த மாவீரர் மாரிமுத்து மைதானம்

பேசுவோர்:
எஸ். முத்து
எஸ். எஸ். தென்னரசு
உ. பில்லப்பன்
பி. திருஞானம்
பூவை. செங்குட்டுவன்

★

கோழியூர்

15—3—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: கே. ரத்தினசபாபதி

பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
ஆர். பாலகுருசாமி

★

திருவையாறு

16—3—54 மாலை 6 மணிக்கு

இடம்: காவிரியாறு

பேசுபவர்:
மு. கருணாநிதி

தோழர் மீ. சு. இளமுருகு சுற்றுப் பயணம்

★

14—3—54: பழைய வத்தலக்குண்டு
26—3—54: வெள்ளிக் கவுண்டன்பாளையம் (மேட்டுப்பாளையம்)
4—4—54: பரவை

அறிவிப்பு

மதுரையில் 'மனோகரா' புத்தகம் வெளியிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மதுரையிலிருந்து மா சீனிவாசன் என்பவர் வெளியிட்டுள்ள வசன புத்தகம் நூற்றுக்கு நூறு தவறுடைய கருத்துக்கள் கொண்ட புத்தகமாகும். படத்தில் உள்ள வசனங்கள் எதுவுமே அதில் ஒழுங்காக இடம் பெறவில்லை. பொது மக்கள் அதை வாங்கி ஏமாற வேண்டாம் என்பதோடு, இத்தகைய போலி வியாபாரிகள்மீது சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றன என்பதையும் அறிவிக்கிறோம்.

நிர்வாகி, 'முரசொலி' பதிப்பகம்,
ஐக்கியா காலனி, சென்னை-24.

பொது உறுப்பினர்கள் கூட்டம்

"நடந்த 13—12—53-ல் நடத்த வேண்டிய சென்னை, 17-வது வட்ட (சூளை கிளை) தி. மு. கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒருசில காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டதை, மீண்டும் 21-3-54 காலை 9 மணியளவில், கழக மனையில் நடைபெறும். உறுப்பினர்கள் இதையே அழைப்பாக ஏற்று கூட்டத்திற்கு வருகைதருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்," என்று, துணைச் செயலாளர் மு. மாசிலாமணி அறிவிக்கிறார்.

நாடகங்கள்

ஸ்ரீ கணபதி உயர்தர ஆரம்பப் பாடசாலை மாணவர் சம்பள உதவி நிதிக்காக, சென்னை, வண்ணையம்பதி, தியாகராய கல்லூரி மண்டபத்தில், 14-3-54 மாலை 6-30 மணிக்கு, எம். கே. தியாகராஜ பாகவதர், எஸ். டி. சுப்புலட்சுமி நடிக்கும் 'பவளக் கொடி' நாடகமும், 21-3-54 மாலை 6-30 மணிக்கு. எம். ஜி. ராமச்சந்திரன் குழுவினர் நடிக்கும் 'இன்பக் கனவு' நாடகமும் நடைபெறும்.

சென்னைத் திருவள்ளுவர் கழக 10-ம் ஆண்டுவிழா

பேராசிரியர் எம். முகம்மது கனி எம். ஏ., தலைமையில், தோழர்கள் புலவர் பி. சொக்கலிங்கம், என். பாண்டுரங்கன் எம். ஏ., ஆகியோர் முறையே "நோயும் மருந்தும்"-"நாமும் வள்ளுவரும்" என்பன பற்றிப், புரசை கங்காதரீச்சுரன் கோயில் தெரு, கரான்மை கழகப் பாடசாலையில் 14—3—54 ஞாயிறு மாலை 5-30 மணிக்குப் பேசுவார்கள்.

"தமிழன்"

★

"கோலையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்து, இடையில் சிலநாள் நின்றிருந்த "தமிழன்" (திங்கள் இருமுறை) மீண்டும் 15—3—54 லிருந்து, உடுமலையிலிருந்து தொடர்ந்து வெளிவருகிறது. நமது இயக்க இதழான தமிழன் திங்களிருமுறை நிறுத்தப்பட்டு விடவில்லை. தொடர்ந்து வெளிவருகிறது என்பதை 'நம் நாடு' வாயிலாக நமது தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்," என்று தோழர் சாமிநரசிம்மன் அறிவிக்கிறார்.

இ. தே. ரா. வீரர்களுக்கு அலவன்சுகள்

—:o:—

இந்திய சர்க்கார் முடிவு

புதுடில்லி மார்ச் 12-

இந்தியத் தேசிய இராணுவ வீரர்கள், தங்கள் வீரச் செயலுக்காகப் பெற்ற பட்டயங்கள் அல்லது பதக்கங்கள் சம்பந்தமாகக் கிடைத்துவந்த பண அலவன்சுகளை 1945 ஆகஸ்டு 15-ம் தேதி முதல் அவர்களுக்குத் தருவதென இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறது.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

பேராசிரியர்
சி. இலக்குவனார், M.A., M.O.L.
எழுதிய

துரத்தப்பட்டேன்

இன்றுள்ள மக்கள் நிலையைத் தெளிவாக எடுத்துக் காட்டுவது. விலை 0—6—0. விற்பனையாளர்கட்கு 25%. கழிவு உண்டு. கழிவு நீக்கி முன்பணத்துடன் எழுதவும். 10 பிரதிகளுக்கு மேல் கழிவு உண்டு

இலக்கியப் பண்ணை,
புதுக்கோட்டை.

பொதுச் செயலாளர்

அண்ணாதுரை

சுற்றுப் பிரயாண நிகழ்ச்சி

பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்கள், தோழர்கள்: அ. பொன்னம்பலனார், ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., எஸ். எஸ். பி. லிங்கம் ஆகியவர்களுடன் கீழ்க்கண்ட இடங்களில் சுற்றுப் பயணம் செய்து, பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுவார்கள்;

14-3-54: பெங்களூர்—திராவிட முன்னேற்றக் கழக தூத்துக்குடி நிதி அளிப்புப் பொதுக் கூட்டம்.

15-3-54: திருவண்ணாமலை — திராவிட முன்னேற்றக் கழக தூத்துக்குடி நிதி அளிப்புப் பொதுக் கூட்டம்.

20—3—54-க்கு மேல் நாகப்பட்டணம், கோடாச்சேரி திராவிட முன்னேற்றக் கழகங்கள் சார்பில் தூத்துக்குடி நிதி அளிப்புப் பொதுக்கூட்டங்கட்குச் செல்லக்கூடும்.

மேல்சபை உறுப்பினர் உடையப்பா மறைவு

பாகனேரி, மார்ச். 11—

இராமநாதபுரம் மாவட்டக் கழக முன்னாள் தலைவரும், சென்னை மேல்சபை உறுப்பினருமான திரு. எஸ். ஓ. எல். பி. உடையப்பா இன்று மாலை 6-30 மணிக்கு பாகனேரியில் உள்ள தமது இல்லத்தில் மாரடைப்பினால் காலமானார்.

* * *

சென்னை, மார்ச். 12—

அவரது மறைவுக்கு வருத்தம் தெரிவித்து, அனுதாபத் தீர்மானம் ஒன்று இன்றைய சட்டசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. பின்னர், அவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் இன்றைய சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.